

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (13.02.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நல்லவன்பாளையம் ஊராட்சியில் இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில்

# புதிய வீடுகள் கட்டும் பணி!

## அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, பிப்.14-

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று (13.2.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நல்லவன்பாளையம் ஊராட்சியில் இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சட்டப்பேரவைதுணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தரப்பகராஜ், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதலமைச்சர் அவர்கள் இலங்கை தமிழர்களின் நலன் கருதி அவர்களுக்கு பாதுகாப்பு நிதி, மானியத்தில் அரிசி, விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை, வாழ்க்கை தர மேம்பாட்டு நிதி, வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல், கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல உதவிகளை செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்கள் வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கின்ற நிகழ்வு நடைபெறுகிறது.

**அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!**

இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழக அரசின் சார்பாக இலங்கை தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் புகலிடங்கள் அளிக்கப்பட்டு, பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. அந்த வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டில் 100க்கும் மேற்பட்ட முகாம்களில் வசித்த இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அவர்களின் ஆட்சிகாலத்தில் நான் உணவுத் துறை அமைச்சராக பதவி வகித்த பொழுது, ஈழத் தமிழர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கி, பொது விநியோக கடைகளில் உணவுப் பொருட்களை பெறுவதற்கு ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் அவர்களுக்கு முதன் முதலாக குடும்ப அட்டைகளை வழங்குவதற்கு முன்னெடுத்தேன்.

அது மட்டுமின்றி தமிழ்நாட்டில் முதன் முதலாக இலங்கை தமிழர்களின் பிள்ளைகள் மருத்துவம், பொறியியல், விவசாய கல்லூரி, பாலிடெக்னிக் உள்ளிட்ட பட்டம் மற்றும் பட்டய படிப்புகள் படித்து பட்டதாரிகளாக மாற ஆணை பிறப்பித்து உதவி செய்தார்கள். மேலும் பொங்கல் விழா காலங்களில் வேட்டி, சேலைகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

**ரூ.40 கோடியில் 694 வீடுகள்!**

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரமாக இல்லங்கள் கட்டி கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை செயல்படுத்தினார்கள். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களிலும் இலங்கை தமிழர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தச்சூர் ஊராட்சியில் 111 குடும்பங்களுக்கு ரூ. 2 கோடியே 90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், சொரகுளத்தூர் ஊராட்சியில் 92 வீடுகளும், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், தென்பள்ளிப்பட்டு ஊராட்சியில் 160 வீடுகளும், போளூர் ஊராட்சி ஒன்றியம், கஸ்தாம்பாடி ஊராட்சியில் 250 வீடுகளும், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், பாப்பந்தாங்கல் ஊராட்சியில் 80 வீடுகளும் மற்றும் தவசி ஊராட்சியில் 32 வீடுகளும், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், ஒசூர் ஊராட்சியில் 50 வீடுகள் என மொத்தம் ரூ. 40 கோடி மதிப்பீட்டில் 694 வீடுகள் இலங்கை தமிழர்களுக்கு கட்டப்படுகிறது.

மேலும் திருவண்ணாமலை மாநகராட்சி, அடி அண்ணாமலை மற்றும் அத்தியந்தல் ஊராட்சியிலும் இலங்கை தமிழர்கள் வசித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே அடி அண்ணாமலை பகுதியில் வசிக்கின்ற 60 இலங்கை தமிழர்களுக்கு நல்லவன்பாளையம் ஊராட்சியில் வீடுகள் கட்டுவதற்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது. அதனை தொடர்ந்து அத்தியந்தல் பகுதியில் வசிக்கின்ற 76 இலங்கை தமிழர்களுக்கு கணத்தம்பூண்டி ஊராட்சியில் வீடுகள் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு, அடிக்கல் நாட்டப்படும். எனவே இலங்கை தமிழர்களுக்கான வீடுகள் விரைவாக கட்டப்படும்.

இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்கள் நலன் கருதி அடிஅண்ணாமலை பகுதியில் வசிக்கின்ற 60 குடும்பங்களுக்கு ஒரு தனிவீட்டின் மதிப்பீடு ரூ.8 இலட்சத்து 10 ஆயிரத்து 390 மதிப்பீட்டில் 8 வீடுகள் கொண்ட யூனிட் 1க்கு ரூ.64 இலட்சத்து 83 ஆயிரத்து 118 மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் காந்திராஜ், திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி நிர்மலா வேல்மாறன், திருவண்ணாமலை வட்டாட்சியர் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காக்களூரில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடுவது குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார் உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர், ஆர்.ஜெயசீலன், சன்.பிரகாஷ், புஜ்ஜி.டி.ராமகிருஷ்ணன், டி.தேசிங்கு ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, தி.வை.ரவி, பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், தி.வே.முனுசாமி, தங்கம் முரளி, உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

# தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. எழுதிய ஆங்கில நூல்கள்!

## மேனாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி வெளியிட்டார்!

சென்னை, பிப்.14-

இந்தியா & ஆஸ்திரேலியா : பழைய இணைப்புகள், புதிய உறவுகள் என்ற பன்னாட்டு கருத்தரங்கின் தொடக்க விழா மற்றும் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன் எழுதிய இரண்டு முக்கிய நூல் களின் வெளியீட்டு விழா ஆகியவை நேற்று சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றன.

இந்நிகழ்வில் கல்வியாளர்கள், இராஜதந்திரிகள், கொள்கை வகுப்பாளர்கள், இலக்கிய அறிஞர்கள் பலர் ஒன்றுகூடினர், இது இலக்கியம், நிர்வாகம் மற்றும் கொள்கை ஆகியவற்றின் மூலம் இந்தியாவிற்கும்ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான வளர்ந்து வரும் உறவை எடுத்துக் காட்டுகிறது.

மேற்கு வங்காளத்தின் மேனாள் ஆளுநர் கோபால கிருஷ்ண காந்தி, ஆஸ்திரேலிய தூதர் திருமதி.சிலாய் ஜாக்கி, சென்னைக்கானதுணை பிரிட்டிஷ் உயர் ஆணையர் திருமதி. ஹலிமா ஹாலண்ட், ஆஸ்திரேலியாவின் வோலோங்காங் பல்கலைக்கழகத்தின் மூத்த உறுப்பினர் பேராசிரியர் பால் ஷரத், தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் ஜே. ஜெயரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் பொதுக் கோள ஆய்வு மையத்தின் உறுப்பினர் பன்னீர்செல்வம். சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் எஸ். ஆம்ஸ்ட்ராங்கின் அன்பான வரவேற்புடன் நிகழ்வு தொடங்கியது, அவர் வரலாற்று மற்றும் சமகால இந்திய-ஆஸ்திரேலிய உறவுகள் குறித்த விவாதங்களில் ஈடுபடுவதற்கு



மேடை அமைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் *“Beatrice Webb Portrait of a Reformist” & “Connecting People & Policy - A Legislative Voice”* ஆகிய இரண்டு ஆங்கில நூல்களை, மேற்கு வங்காளத்தின் மேனாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி, பேராசிரியர் பால் ஷரத் ஆகியோர் வெளியிட்டனர், முதல் பிரதிகளை திருமதி சிலாய் ஜாக்கி, திருமதி ஹலிமா ஹாலண்ட் பெற்றுக்கொண்டனர்.

பேராசிரியர் பால் ஷரத் தனது உரையில், இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான ஆழமான கல்வி மற்றும் இலக்கிய பரிமாற்றங்களைப் பற்றி பிரதிபலித்தார், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் கலாச்சார விவரிப்புகள் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

மேலும் தமிழச்சி தங்கபாண்டியனின் *“Beatrice Webb - Portrait of a Reformist”* நூல் பற்றிய விரிவான பகுப்பாய்வை வழங்கினார், இது சமூக நீதி மற்றும் சீர்திருத்தவாத சிந்தனையின் ஆய்வை எடுத்துக்காட்டுகிறது என்று தெரிவித்தார். திருமதி சிலாய் ஜாக்கி மற்றும் திருமதி ஹலிமா ஹாலண்ட் ஆகியோர் இதேபோன்ற உணர்வுகளை எதிரொலித்தனர், இரு நாடுகளுக்கும் இடையிலான கல்வி, ஆராய்ச்சி மற்றும் கலாச்சார ஈடுபாட்டில் கூட்டாண்மைகளை வளர்ப்பதில் ராஜதந்திரத்தின் பங்கை வலியுறுத்தினர். இந்த நிகழ்வில் புத்தகங்கள் குறித்த விமர்சன ரீதியான பிரதிபலிப்புகளும் இடம் பெற்றன. டாக்டர் ஜே. ஜெயரஞ்சன், —*”Connecting People & Policy - A Legislative Voice”* என்ற தலைப்பில் தனது கருத்துக்களில், நிர்வாகம், கொள்கை வகுத்தல் மற்றும் பொது சொற்பொழிவு குறித்த விவாதங்களை வடிவமைப்பதில் புத்தகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தலைமை உரையை ஆற்றிய திரு.கோபாலகிருஷ்ண காந்தி, டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியனின் இலக்கியம் மற்றும் கொள்கைக்கான பங்களிப்புகளைப் பாராட்டினார், அவரது படைப்புகள் ஆட்சி, செயல்பாடு மற்றும் கலாச்சார உணர்வுக்கு இடையே ஒரு பாலமாக இருப்பதாக விவரித்தார். தனது ஆசிரியர் உரையில், முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்பு விருந்தினர்களுக்கு நன்றி தெரிவித்து அவரது புத்தகங்களுக்குப் பின்னால் உள்ள உத்வேகங்களைப் பற்றி தெரிவித்தார். முற்போக்கான கொள்கை வகுத்தல், தமிழ் கலாச்சார பாரம்பரியம் மற்றும் பொது சிந்தனையை வடிவமைப்பதில், இலக்கியத்தின் மாற்றும் சக்தி ஆகியவற்றிற்கான தனது உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். பேராசிரியர் திருமதி. சுப்பலா பாண்டியராஜன் நன்றி தெரிவிக்கும் உரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது, அதைத் தொடர்ந்து இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இந்த கருத்தரங்கின் தொடக்க விழாவும் புத்தக வெளியீட்டு விழாவும் இந்திய-ஆஸ்திரேலிய கலாச்சார மற்றும் கல்வி பரிமாற்றங்கள் குறித்த அர்த்தமுள்ள விவாதங்களை எளிதாக்கியது மட்டுமல்லாமல், இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த இலக்கிய மற்றும் இராஜதந்திர தொடர்புகளை வலுப்படுத்தியது, இது ஆட்சி, இலக்கியம் மற்றும் கொள்கையில் எதிர்கால ஒத்துழைப்புகளுக்கு மேடை அமைத்தது.

# விருதுநகர் மாவட்டத்தில் அரசு நலத் திட்டங்கள்!

## அமைச்சர் கீதா ஜீவன் ஆய்வு!

விருதுநகர், பிப். 14-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (13.02.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சமூக நல ஆணையர் திருமதி ஆர். லில்லி, இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் திருமதி ஐ.சா.மெர்சி ரம்யா, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மதிய உணவு சத்துணவு திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், சத்துணவு மையங்கள், மாவட்ட அளவில் செயல்படும் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பு குழுவின் செயல்பாடுகள், புதுமைப்பெண் திட்டம், தமிழ் முதல்வன் திட்டம், திருமண நிதி உதவி திட்டம், திருநங்கைகள் சுயதொழில் துவங்கிட மானிய திட்டம், திருநங்கைகள் அடையாள அட்டை, திருநங்கைகளுக்கான ஒய்வூதியம், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், வரதட்சணை தடுப்புச் சட்டம், தனியார் பணிபுரியும் மகளிர் விடுதி பதிவு விவரங்கள், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், 18 வயது முடிவுற்ற பயனாளிகளின் முதிர்வுத் தொகை வழங்கப்பட்ட விவரம், மாவட்டத்தில் குழந்தை திருமணங்கள் மற்றும் தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள், பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம், மாவட்ட மகளிர் அதிகாரம் மையத்தின் செயல்பாடுகள், மகளிர் உதவி எண், ஒருங்கிணைந்த சேவை மையத்தில் வழங்கப்பட்டு வரும் சேவைகள், முதியோர் இல்லங்கள், சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், ஒருங்கிணைந்த வளாகங்கள், ஒருங்கிணைந்த மூத்த குடிமக்களுக்கான திட்டங்கள், மகளிர் குறுகிய கால தங்கும் இல்லங்கள், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து ஒவ்வொரு துறை சார்ந்த அரசு அலுவலருடன் ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்டத்தில் குழந்தைகள் பிறப்பு குறித்த மருத்துவத்துறையின் புள்ளி விவரங்கள் கிடைத்தவுடன் குழந்தைகளின் வயதுக்கேற்ற உயரம் மற்றும் எடை குறித்து நேரில் சென்று ஆய்வு செய்து குறிப்பிட்ட கால இடைவெளியில் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதுபோல கர்ப்ப காலத்தில் பெண்களின் ஊட்டச்சத்து வளர்ச்சியினை முறையாக கண்காணித்து, அவர்களுக்கான ஊட்டசத்துக்கள் கிடைக்கச் செய்வதன் மூலம் ஆரோக்கியமான குழந்தைப் பேறு அடைவதை உறுதி செய்ய வேண்டும்.

மதிய உணவு திட்டத்தில் சமையல் கூடத்திற்கு தேவையான மின்சார வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தேவைப்படின் தொடர்புடைய அரசு துறைகளிடம் தெரிவித்து அதனை உறுதி செய்ய வேண்டும். திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள தொகைகளை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

குடும்ப வன்முறை மற்றும் வரதட்சணை கொடுமையால் பாதிக்;கப்படும் பெண்களுக்கு முதற்கட்டமாக அவர்களின் நகை, பணம், கல்விச் சான்றிதழ்கள் உள்ளிட்டவைகளை பெற்றுத்தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தை திருமணம் தடுப்பு குறித்து தொடர்ச்சியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக அவர்களுக்கு சென்றடைய அரசு அலுவலர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கி, நமது மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல அனைவரின் ஒத்துழைப்பை நலக வேண்டும் என மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஹிமான்சு மங்கள், விருதுநகர் நகர் மன்ற தலைவர் ஆர்.மாதவன், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13.2.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் 7வது மண்டலம். பாடிகுப்பம், வார்டு 93.பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் கொண்ட பள்ளி கட்டிடத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) முனைவர்.ஜெ.விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார். மண்டலக் குழுத்தலைவர் பி.கே.மூர்த்தி மண்டல அலுவலர் க.தமிழ்செல்வன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.உமா சந்தானம், டி.எஸ்.பி.ராஜகோபால், திருமதி நாகவள்ளி பிரபாகர், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.